கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 38
ஐப்பசி 7 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# அனைத்துலக நற்கருணை மகாநாடு

அடுத்து நிகழும் 1973ஆம் ஆண்டு மாசித் திங்கள் ஆஸ்திறேலியதேச மெல்போன் நகரில் நிகழவிருக்கும் நாற்பதாவது அனைத்துலக நற்கருணை மகாநாட்டுக்குச் சமூகமளிக்குமாறு ஏற்கனவே உலகின் பல நாடுகளிலும் அநேக யாத்திரைக் கோஷ்டிகள் ஆயத்தமாகத் தொடங்கி விட்டன. பிரித்தானியிலிருந்து செல்லும் யாத்திரிகர்கள் 22 தினங்களிலே உலகின் அரைவாசித் தூரத்தைச் சுற்றிப் பிரயாணஞ் செய்து அங்குபோய்ச் சேருவார்கள். திருச்சபை இன்று எதிர்பார்க்கிறபடி மகாநாடு ஆடம்பரம் யாதுமின்றியே அமைதியாக நடந்தேறுமென்று அங்கர் அதிமேற்றிராணியாரான நொக்ஸ் ஆண்டகை தெரிவித்திருக்கின்றார். உலகின் சகலபகுதிகளிலுமிருந்தே வரவிருக்கும் தங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் வரவேற்க ஆஸ்திறேலிய மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றார்கள்.

## பத்திரிகை மசோதா எதிர்ப்பில் இலங்கைக் கத். சங்கங்கள்

சனநாயக முறைக்கு நேர்விரோதமான பான்மையில் இலங்கையில் பத்திரிகை அடக்கு மசோதா ஒன்றை அரசாங்கம் அமுல் நடத்த எண்ணியிருந்ததும், அதற்கு நாடுபூராவும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதன் காரணமாக அம்மசோதா புனராலோசனை செய்யப்பட சிலகாலம் ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதும் மக்கள் அறிந்தவிஷயமே. இந்த எதிர்ப்பின் முன்னணியில் அகில இலங்கைக் கத்தோலிக்க சங்கங்களும் பங்குபெற்றுக் கொண்டன. கிறீஸ்தவ தொழிலாளர் இயக்கம், இளங்கிறீஸ்தவ தொழிலாளர்சங்கம், மரியாயின் சேனை, கிறீஸ்தவ சீவியசமுதாய இயக்கங்கள் ஆகியன நாட்டின் வேறுபல இயக்கங்களுடன் ஒன்று சேர்ந்து உழைத்ததன் பயனாக உருவாகிய பொதுமக்கள் அபிப்பிராயத்துக்கு அரசாங்கம் கொடுத்திருக்கும் தற்காலிக மதிப்பு நிரந்தர மதிப்பாக இருக்குமென யாவரும் எதிர்பார்க்கின்றனர்.

## தென் ஆபிரிக்காவில் சூலு இனத் சுதேசி துணைஆயர்

தென்ஆபிரிக்க மாகாணத்தில், சிறுபான்மையினரான வெள்ளை நிறமக்கள் ஆட்சியின்கீழ், பெரும்பான்மையினரான மறுநிற மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு வருவதை யாவரும் அறிவர். இந்நிலைமையைத் துணிவுடன் எதிர்த்து மறுநிறமக்களுக்கு நீதிசெலுத்த வழிகாட்டி வருவது அங்குள்ள கிறிஸ்தவ சமயங்களே. ஆகவே அங்குள்ள கிறிஸ்தவ சபைகளையும் அவற்றின் அதிகாரிகளையும் அரசாங்கம் வெறுத்து வருகின்றது. இச்சூழ்நிலையில், அப்பிரிவிலுள்ள ஜொகானஸ்பேர்க் கத்தோலிக்க மேற்றிராசனத்துக்கு வத்திக்கான் ஒரு சூலு இனச் சுதேசியைத் துணை மேற்றிராணியாராக நியமித்திருப்பது நீதிசெய்வதில் எவற்றுக்கும் வத்திக்கான் பயந்து தவறிவிடப்போவதில்லை என்பதைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது. துணை ஆயராக நியமனம் செய்யப்பட்டிருப்பவர் வண. பீற்றர் பட்டலெசி சுவாமியாரே—இந்த மேற்றிராசனத்திலுள்ள 170 குருமாரில் பெரும்பாலானோர் வெள்ளை நிறத்தவரே.

### வடஅயர்லாந்திய சமாதானத்துக்கு முட்டுக்கட்டை

வடஅயர்லாந்தில் சமாதானத்தை நிலைநாட்ட ஒரு புதிய அரசியல் திட்டம் வகுக்க ஆங்கில அரசாங்கம் கொண்டிருந்த நம்பிக்கை பலம் குறைந்து வருகின்றது. முக்கிய முட்டுக்கட்டையாக அங்கு அரசாங்கம் கையாண்டுவரும் விசாரணையில்லா மறியல் முறை இருக்கிறது. இந்த முறையை அல்ஸ்ரர் பிரிவிலுள்ள புரொட்டஸ்தாந்துசபையினர் அடங்கிய பல அரசியற் கட்சிகளும், அங்குள்ள பெரும்பாலான கத்தோலிக்கரும் எதிர்க்கின்றனர். பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஆங்கில அரசாங்கம் இந்த முறையைக் கைவிடவேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை. மேலும், இம்முறையினால் இப்போது சிறையிலிருப்பவர்கள் யாவரும் விடுதலை அடைய வேண்டுமெனவும் அவர்கள் வாதாடுகின்றனர்.

### வெனிஸ் கொன்டோலா வள்ளத்தில் பாப்பரசர் சின்னப்பர்

வடஇத்தாலியில், வெனிஸ் நகரத்துக்கு 63 மைல்களுக்கு அப்பாலுள்ள யுடீனே என்னும் பட்டணத்தில் அண்மையில் நடந்த அகில இத்தாலியின் சற்பிரசாத மகாநாட்டில் பங்குபெற 6-வது சின்னப்ப பாப்பரசர் அங்கு போகும்வழியில் வெனிஸ் நகரத்தில் சிலமணித்தியாலங்கள் தங்கி நாட்டில் பாரம்பரியம்வாய்ந்த வெனிஸ் கொன்டோலா வள்ளத்தில் கால்வாயைக் கடந்து சென்றார். பல்லாயிரம் மக்கள் இக்காட்சியைக்கண்டு சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினர். பாதுகாப்புக்காக அவரைப் புடைசூழ்ந்த இராணுவத்தினர், மக்கள் இக்காட்சியைக் காண பாப்பரசரிலிருந்து அகலநின்றனர். நாலுவீரர் வள்ளத்தை வலித்துச்செல்ல, இடதுகையினால் ஆசனத்தைப் பிடித்துநின்ற பாப்பரசர் வலதுகையை உயர்த்தி அசைத்தவண்ணமாய் மக்களின் ஆரவார சந்தோஷத்தில் பங்குபெற்றுக்கொண்டார். வெனிஸ் நகரத்தில் ஒரு பாப்பரசர் இதன்முன் 172 வருடகாலத்துக்கு காட்சி அளிக்கவில்லை.

## திருச்சபையின் எதிர்கால நம்பிக்கை ஆபிரிக்கா

21ஆம் நூற்றாண்டின் பெரிய கண்டமாக ஐரோப்பா அல்ல, ஆனால், ஆபிரிக்காவே இருந்துவரும்; ஐரோப்பாக் கண்டமானது ஆசியாவின் தூரமான அந்தத்திலுள்ள ஒரு குடாநாடாக ஏலவேதானே ஆகிக்கொண்டிருக்கிறது; காலப்போக்கிலே ஒருகால் ஆபிரிக்க, ஆசிய குருமார் சென்று மிஷனரிமாராகத் தொண்டாற்றும் ஒரு பொதுவிடமாக ஐரோப்பா வரலாம் என்று கருதினால் றைற் ஆண்டகை கூறுகின்றார். "எதிர்காலத்திலே கத்தோலிக்க திருச்சபையின் பெருமை வாய்ந்தநம்பிக்கைக்குரியவற்றில் ஒன்றாய் ஆபிரிக்கா இருந்துவரும்" என்று ஆறாம் சின்னப்ப பாப்பரசர் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றார். மேலும் அதுவே "கிறிஸ்துவின் புதிய தாய்நாடாகத்திகழும்" என்று 1969ஆம் ஆண்டிலேயே அவர் அறிவித்திருக்கின்றார்.

### மனிதஇனம்சேற்றில் புரளுகின்றது

சென்ற வாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தமது கோடைகால வாசஸ்தலமாகிய காஸ்ரெல் கொனடொல்பாவில் பல்லாயிர யாத்திரிகர்களுக்குப் பேட்டி அளிக்கையில் உபயோகித்த கடும்வார்த்தைகளைப்போல் முன்னொருபோதும் உபயோகிக்கவில்லையென அவதானிகள் கூறுகின்றனர். இக்காலத்தின் ஒழுக்கக்கேடுகளின் கவலை பரிசுத்த தந்தையின் இதயத்தை புண்படுத்தியிருப்பதால் இக்கவலையின் கொடுமையே இவ்வார்த்தைகளுக்குக் காரணமாயிற்று. கருப்பத்தடை, கருஅகற்றல், சமுசார ஒழுக்கச் சீர்கேடு, இளைஞரின் முறைகெட்ட சீவியம், தேவையற்ற இனப்பெருக்கக் கலவி முதலியன அவரது கவலை நிறைந்த வார்த்தைகளுக்குக் காரணமாயின.

### மாதர் குருவாகும் இயக்கம் பணமின்றி அழிகிறது

பெண்களின் முன்னேற்றத்துக்கென கத்தோலிக்கர் மத்தியில் இயங்கிவந்த இயக்கம் ஒன்றின் பெயர் புனித ஜோன் சர்வதேச இயக்கம். வேறுபல நோக்கங்களுடன் இந்த இயக்கம் மாதர் குருமாராகும் நோக்கத்துக்கும் உழைத்துவந்தது. மாதர் குருபதவி அடைவதுமேலும் பலவருடங்களுக்குச் சாத்தியமில்லையென்று அறியவந்ததும் இந்த இயக்கத்தினரின் உற்சாகமும் குன்றிப் போய்விட்டது. அதன்பயனாகப் பண ஆதரவுஇன்றி இந்த இயக்கம் இன்று அழிந்துபோகும் நிலையை அடைந்துவிட்டது. நிலைமையை ஆலோசிப்பதற்கு அண்மையில் தீவிர ஆதரவாளர்கள் ஒன்றுகூட இருக்கின்றனர்.

## கத்தோலிக்க — முஸ்லிம் உறவு திருந்திவருகின்றது

ஐக்கிய அமெரிக்கா தேச இஸ்லாமிய கலாச்சார நிலையத் தலைவர் வாஷிங்ரன் நகரத்தில் விடுத்த அறிக்கையில் 2ஆம் வத்திக்கான் சங்கமுடிவின் பின்பு கத்தோலிக்க முஸ்லிம் உறவு பெருமளவு திருந்தி வந்திருப்பதாக அறிவித்திருக்கிறார். கத்தோலிக்க திருச்சபை காட்டிவரும் சிநேகபான்மையின் காரணமாக முற்காலத்திலும் கூடிய தொகையினராக இஸ்லாமிய தலைவர்கள் இக் காலத்தில் பாப்பரசரை ரோமாபுரி சென்று தரிசித்து வருவதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். மேலும் வருங்காலத்தில் இருபகுதியினரும் தீவிரமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு இருசாராரும் ஒரு தேவனில் நம்பிக்கை யுடையவர்களாயும், கற்புநெறி, குடும்பவாழ்க்கை, கருத்தடை, பொது ஒழுக்கம் ஆகியவற்றில் ஒரே கொள்கை உடையவராயுமிருப்பதால் இத்தகைய ஒத்துழைப்பைத் திட்டம் வகுத்துச் செய்யவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்.

### மூன்று சமயங்களுக்கும் ஒரு பலிப்பீடமே

லண்டன் மாநகரிலுள்ள பிரதான ஆகாயவிமான நிலையத்தில் அண்மையில் கட்டி எழுப்பப்பட்ட பொதுத் தேவாலயத்தில் கத்தோலிக்கருக்கும் அங்கிளிக்கன் சபையினருக்கும், சுதந்திரசபையினருக்கும் இதுகாலவரையும் அவர்களது உபயோகங்களுக்கென பிறிது பிறிதான மூன்று பலிபீடங்கள் இருந்தன. ஒற்றுமை இயக்கம் பலமடையும் இந்நாட்களில் இம்மூன்று சபைகளும் இனிமேல் அங்கே ஒரே பீடத்தையே உபயோகித்துக்கொள்ள முடிவு செய்துள்ளனர், ஆனால் அவர்களுடைய ஆராதனைகள் ஒரே நேரத்தில் நடைபெறமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்சுத்தம் நீரால் ஏற்படுகிறது; அதுபோன்று உள்ளத் தூய்மை வாய்மையால் ஏற்படுகிறது.

— குறள்

சத்தியவேத பாதுகாவலன்

# திருச்செபமாலைப் பக்தி

பலர் ஒன்றுகூடி ஒரு காரியத்தில் ஈடுபடும்போது அதில் உள்ள பலனை நாம் கண்டிருக்கிறோம். ஆகவேதான் பொது வழிபாட்டில் விசுவாசிகள் பங்குபற்றுவதைத் திருச்சபை பெரிதும் விரும்புகிறது. ஒன்று கூடிச் செபிக்கும்போது எமது தனிச் செபங்கள் எனும் சிற்றுறுகள் ஒன்றாக இணைந்து பேராறுகி இறைவன் முன்னிலையில் சக்திவாய்ந்தனவாக ஆகின்றன.

ஒவ்வொரு குடும்பமும் ஒரு சிறு திருச்சபை என வத்திக்கான் சங்கம் கூறுகிறது. அதன் அங்கத்தவர்கள் செபத்தில் ஒன்றுகூடும்போது அந்தச் செபம் இறைவனைப் பிரியப்படுத்தும் சக்திவாய்ந்ததாக இருக்குமென்பதில் ஐயமில்லை. ஒரு குடும்பத்தவர் சேர்ந்து சொல்வதற்கு மிகவும் பொருத்தமான செபம் செபமாலையாகும். குடும்பத்தில் அங்கத்தவர் அனைவரும் பங்குபற்றக்கூடியதும், எவ்வேளைக்கும், எக்கருத்துக்கும் பயன்படுத்தக் கூடியதுமான செபமாலையைப் போல் குடும்ப ஒற்றுமையை வளர்க்கும் சாதனம் வேறொன்றும் இல்லை.

செபமாலைக்கு இருக்கும் உன்னத பண்புகளைக் கண்டுதான் திருச்சபை பல நூற்றாண்டுகளாக அதை ஆதரித்து வற்புறுத்தி வந்திருக்கிறது. இப்போது திருவழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதனால் செபமாலையின் சிறப்புக் குறைந்து விட்டதெனக் கருதலாகாது. திருவழிபாட்டில் பங்குபற்றிய ஒவ்வொருவரும் தனிமையில் இடைவிடாது செபம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

செபமாலை தனிச் செபமாகச் சொல்லப்பட்டாலும் பொதுச் செபமாகச் சொல்லப்பட்டாலும் அது சொல்வோரின் மனதைப் பக்குவப்படுத்தி திருவழிபாட்டில் உள்ளரங்க பக்தியுடன் பங்குபற்றத் துணை புரிகின்றது.

செபமாலை வெறும் வாய்ச்செபமாக மட்டுமல்ல. ஒரு ஆழ்ந்த தியான செபமாகவும் இருக்கின்றது. வேதாகமத்தைக் குறித்து விசுவாசிகள் ஆழ்ந்து தியானிக்க வேண்டுமென்று திருச்சபை விரும்புகின்றது. தேவமாதா கிறிஸ்துநாதரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை அடிக்கடி நினைவுகூர்ந்து அவற்றைப்பற்றித் தியானித்து வந்தாள். செபமாலையில் நாம் அதையே செய்கிறோம். வேதாகமத்தின் சாரம் செபமாலையுள் அடங்கியுள்ளது. ஒவ்வொருவரும் தமது வயதுக்கும், பக்குவத்துக்கும் ஏற்ற வண்ணமாகத் தியானிக்கக் கூடிய முறையில் அது அமைந்துள்ளது.

செபமாலை ஓதுவது மட்டும் அல்ல, அதை உடன் வைத்திருப்பதே ஒரு நற்பழக்கமாகும். சில நிமிடங்கள் கிடைக்கும் போதெல்லாம் அதைக் கையிலெடுத்துச் சில மணிகளைச் சொல்லுவதால் அடிக்கடி தேவதாயாரை நினைவு கூருகிறோம். எப்போதும் முழுச் செபமாலைதான் செபிக்க வேண்டும் என்ற விதியொன்றுமில்லை.

**செபமாலையால் உலகடைந்த நன்மைகளும், நடந்த புதுமைகளும் எண்ணற்றவை. தனி மனிதர் வாழ்விலும் திருச்சபையின் வாழ்விலும் செபமாலையால் ஏற்பட்ட ஆசீர்வாதங்கள் அனந்தம். எனவேதான் திருச்சபை இம்மாதத்தையே திருச் செபமாலையின் மாதமாக நீண்ட காலமாக அனுசரித்து வருகிறது.**

# "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக!"

**(ஆண்டவர் எங்களோடு இருப்பதால் நாங்கள் கிறிஸ்துவாகி, தேவனோடு நித்திய வாழ்வில் தோழமை கொண்டு, தேற்றரவராகிய ஆவியால் சீவித்து, சிலுவையின் மகிமையாகிய கிறிஸ்துவின் உத்தானத்திற்குப் பங்காளிகளாகிறோம்).**

ஒரு கடவுளை விசுவசிக்கும் எவரும் காலாகாலம் அவருக்குப் பலிசெலுத்தி அவரின் அன்பின் நிறைவு, வல்லமை, பராமரிப்புக்கும், பரமானந்தத்திற்கும் பங்காளிகளாக வந்திருக்கிறார். எப்படி அன்பின் சம்பூரணமான கடவுள் தமது பிரமாணிக்கமான பிரசைகளைக் கைவிடுவார்? எனவே தேவன் மனிதனானார். எல்லாம் கடந்தவர் எம்முன்னே வந்தார். எனவே அவரைக் கட+உள் என அழைக்கிறோம். அவர் தமது மிகவும் உன்னத மகத்துவமான சிம்மாசனத்திலிருந்து மனிதனில் தாம்கொண்ட அளவில்லாத நேசத்தளவு தம்மைத் தாழ்த்தினார். அவர் தம்மை ஏற்றுக்கொள்ளும் எவரும் தான் தன் பிதாவில் என்றும் பெறும் நித்திய சீவியத்தை எல்லோரும்பெறச் சித்தமானார். இதற்காக அவர் தமது பிதாவுக்கு மிகவும் பிரியமான பலிப்பொருளும் குருவுமாய் நின்று சிலுவையில் தம்மை அர்ப்பணித்தார். அவரில் விசுவாசமானோர் எவரும் அவரால் நித்திய பிதாவிற்கு மிகவும் பிரியமான பிள்ளைகளாக்கப்பட்டனர். எனவே, ஒவ்வொரு பூசைப்பலியில் சிலுவைப்பலி புதுப்பிக்கப்படும்போது பலி ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு குருவும் நித்திய குருவாகிய யேசுவின் குருத்துவத்தைத் தாங்கி நித்திய பிதாவின் அன்பின் சீவியத்தைச் சகல மக்களும் பூரணமாய்ப் பெறும்படியாக எல்லோரையும் பார்த்துப் பலதடவைகளில், "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்கிறார். எப்படி பிதா சுதனிலும், சுதன் பிதாவிலும் சம்பூரணமாய் இருக்கிறார்களோ அதேபோல் சகல விசுவாசிகளும் சுதனின்பெறுபேறுகளால் நித்தியபிதாவில் சம்பூரண சீவியம் அடைய வேண்டுமென்று குருவானவர் ஆசிக்கிறார். இச்சீவியத்தைப் பூரணமாய்ப் பெற்ற புனித சின்னப்பர் கூறுவதுபோல்:

**"நான் அல்ல — கிறீஸ்துவே**

என்னில் சீவிக்கிறார்" இதுவே புனிதர்களின் ஐக்கியம். இதுவே நித்திய வாழ்வில் தோழமை. இதனால் வரும் பலனே மோட்ச ஆனந்தம். இதுவே இஷ்டப்பிரசாத சீவியத்தின் நிறைவு. புனித மரியம்மாள் தேவதூதனை விழித்து, "இது எப்படி ஆகமுடியும்" என்று வினவினபோது,

**(பி. ஜே. அமிர்தநாயகம்)**

"இது தேவனால் ஆகமுடியும்" என்று விடையளித்தார். எனவே, தேவதாயார் தன்னைத் தேவனின் ஆட்சிக்குப் பூரணமாய்அர்ப்பணித்து "இதோ, ஆண்டவரின் அடிமை" என்று கூறக்கூடியதாய் இருந்தது. அதேநேரம் புனித சின்னப்பர் கூறியதுபோல் "நான் அல்ல; கிறீஸ்துவே என்னில் சீவிக்கிறார்" என்று தேவதாய் கூறக்கூடியதாய் இருந்தது. எனவே புனித சின்னப்பர் தமது முதல் கிறிஸ்தவர்களை விழித்து, "சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்" என வேண்டினார். தேவனில் தேவ தத்துவத்தால் சீவிக்கவிரும்பும் கிறீஸ்தவன் எவனும் யேசுவின் சிலுவையை எப்படி நேசியாதிருக்கக் கூடும்? யேசுவில் அன்பில்லாதவருக்கு அவரின் சிலுவை கசப்பாய்த் தோன்றுவது மெய். ஆனால், நித்திய பாக்கியத்தின் திறவுகோலாய் அது இருக்கும்போது எப்படி அது கசப்பாய் இருக்கும். இவ்வுண்மைக்கு உத்தம சாட்சிகள் வாளுக்கும், நெருப்புக்கும், கொடிய மிருகங்களுக்கும் தங்கள் உயிரை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்த வேதசாட்சிகளே. சகல மெய்யான வெற்றியின் காரணமான யேசுவின் திருச்சிலுவையே! எல்லோரையும் எப்போதும் எங்கும் உம்மில் பரவசமாக்கியருளும்! தேவாதி தேவன் இவ்வுன்னத கருவியைத் தெரிந்திருந்தால் யார்தான் இவ்வுன்னத கருவியின் மகத்துவத்தை மறுக்க முடியும்?

## தேற்றரவு செய்கிற ஆவியினால் சீவிப்போமாக

புனித சின்னப்பர் கூறுவதுபோல், "இஸ்பிரீத்து சாந்துவினால் சீவிக்கிறோமானால் இஸ்பிரீத்துசாந்துவுக்கு ஏற்றபடி நடக்கக்கடவோம். இஸ்பிரீத்துசாந்துவின் கனிகள் ஏதென்றால் அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயாளம், நன்மைத்தனம், சாந்தம், விசுவாசம், அடக்கஒடுக்கம், இச்சை அடக்கம், நிறைகற்பு இவைகளாம். கடவுளை நாம் நமது ஊனக் கண்களால் காணமுடியாது மெய். ஆனால், அவருடைய ஆவியை நாமெல்லோரும் நமது ஞானக்கண்களால் காண்கிறோம். ஆனபடியால்தான் மேற்கூறிய சகல புண்ணியங்களையும் மதித்து, பாவங்களை வெறுக்கிறோம். சகல புண்ணியங்களின் மூலகர்த்தாவும், காரணமும் அவரே. எனவே புனித லூக்காஸ் சுவிசேஷத்தில் யேசு, "என்னை நல்லவன் என்பதேன்? சருவேசுரன் ஒருவரே அன்றி வேறு எவரும் நல்லவர் அல்லர்" என்று கூறுகிறார். என்வே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் சர்வேசுரனின் ஆவியாகிய தூய ஆவியினால் உருவாக்கப்பட வேண்டும், அவரின் கனிகளைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு சம்பூரணமாய் உந்தப்பட்டவரும், மனிதனின் கண்கள் கண்டவரும், கேட்டவரும், மனிதனின் வரலாற்றில் அழியா இடம் பெற்றவராகியவர் கிறிஸ்துவே. இவரே இறைமக்களாக உருவாக்கப்பட விரும்புவோர் எல்லோரின் வாழ்வும் வழியும், எல்லோரின் உன்னத எடுத்துக்காட்டும் இலட்சியமுமாம். ஏனெனில், "அவரிலும் அவராலும், அவரோடுமே" யாவும் படைக்கப்பட்டன. அவரின் பெறுபேறுகளில் மிகவும் உன்னத கனிகளே சகல புனிதர்களுமாம்.

## எங்கிருந்து வந்தது சிலுவை ?

யார் சொன்னது கிறீஸ்து கடவுளென்று? அவரை ஒரு பெண் பெற்றெடுத்தா. அவரைக் காணமற்போய் கண்ட போது, "உமது பிதாவும், நானும் உம்மைத்தேடினோம்" என்று அதேபெண் கூறினா. அவர் சாப்பிட்டார். பானம் பண்ணினார். விசேஷமாய்ப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# இரக்கக்கொலை

## அது கொலை; அன்றேல் தற்கொலை

மாற்ற முடியாத வருத்தத்தினால் வருந்துபவர்களை அல்லது தள்ளப்பராயத் தஞ்சக் கேட்டினால் வருந்துபவர்களை அத்துன்பங்களிலிருந்து நீக்க இரக்கத்தின் நிமித்தம் மருந்துகளினால் மரணமடையச் செய்வது குற்றமற்றது எனக்கருதுபவர்கள் தாங்கள் எண்ணுவது யாதென அறியாதவர்கள் என ஆங்கில நாட்டுக்கருதினால் ஹீனன் அடிகளார் சென்ற வாரம் லண்டன் மாநகர மருத்துவ தாதிமார் சபையில் உரையாற்றும் போது கூறினார். இவர்களது எண்ணத்தின் போக்கை ஆராய்ந்தால் ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் சுகயீனமானவர்களையும் யூதஇனத்தவர்களையும் கோடிக்கணக்காக அழித்து ஒழித்துடைத்த மனப்போக்குக்கு இது சமானமாகின்றது. அந்த அநீதியை எவ்வாறு ஆதரிக்க முடியாதோ அவ்வாறே இந்த இரக்கக்கொலையையும் ஆதரிக்க முடியாது. தாம் சுகமடைய பிறரைக் கொல்பவர் கொலைக் குற்றம் செய்கிறார்கள். தம்மையே கொலை செய்பவர்கள் தற்கொலைக் குற்றம் புரிந்து கொள்ளுகிறார்கள் என்று விளக்கம் அளித்தார் அடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு

அன்புச் சோதரரே!

இளைஞர் உலகின் 2-ம் வருடச் சிறப்பிதழ் உங்கள் கரங்களில் தவழ்கிறது. 3-ம் வருட ஆரம்பத்தில் அடி எடுத்து வைக்கிறது இளைஞர் உலகு. இளம் உள்ளங்களுக்கு தன் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் இளைஞர் உலகு மகிழ்ச்சியடைகிறது. ஆசிச் செய்தி அனுப்பியவர்களுக்கும் விடயதானங்கள் அனுப்பி வருபவர்களுக்கும் நன்றி தெரிவித்து அவர்களின் சேவையை இளைஞர் உலகு மென்மேலும் எதிர்பார்க்கிறது.

ஐப்பசி மாதமல்லவா? வாடாமலர்மாலையாம் செபமாலையை அன்னைக்குச் சூடி அன்னையின் அருளைப் பெறுவோமாக.

உங்கள் கற்பனைக் கருவூலங்களையும் சிந்தனைச் சிதறல்களையும் கருத்துக் குவியல்களையும் இளைஞர் உலகிற்கு அள்ளி வீசுங்கள்; மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

சோதரன்.

## நெஞ்சத்தில் ஒரு நேசர்

இன்றைய எமது கிறிஸ்தவ சமுதாயத்திலே நாம் கண்கூடாகப் பல குறைகளைக் காணக் கூடியதாகஇருக்கிறது.

இக்குறைகளைவிட, இவைகளை நீக்கி நம் சமுதாயத்தை நிலை நிறுத்த வேண்டிய இளைஞர்களின் மாறுபட்ட போக்கினைக் காணும் போதுதான் வேதனை ஏற்படுகிறது.

ஆம், நமது கிறிஸ்தவ வழிபாட்டு முறைகள் நம்மை விட்டு விலகிச் செல்வதற்கும் நமதிளம் சமுதாயமே காரணமென்பதை நாம் மறுப்பதற்கில்லை.

நாகரீகம் என்ற பெயரில் நம் வாழ்க்கையை நாமே குட்டிச் சுவராக்கிக் கொள்கிறோம். இதே நாகரீகம்தான் நமது வழிபாட்டு முறைகளை நாம் செம்மையாக மேற்கொள்ளவும் தடையாக இருக்கிறது.

ஆம். நாகரீகம் என்னும் சாத்தான் துணை கொண்டு நாம் செய்யும் பாவங்களுக்குத் தான் அளவேது?

இறைவனின் திருநாமத்தை உச்சரிக்கக்கூட சில சந்தர்ப்பங்களில் இந்தச் சாத்தான் நம்மை விடுவதில்லையே!

தேவனை மகிமைப்படுத்த வேண்டிய நாம் அவரை நிந்திக்கக்கூடிய வகையில் நடந்து கொள்கிறோம் அல்லவா?

நமது திருப்பணிகளை நிறைவேற்றுவதற்காக நாம் தேவாலயத்துக்குச் செல்கிறோமேயல்லாது, உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கல்ல என்பதை முதலில் நாம் மனதிற் கொள்வோம். ஆடை, அலங்காரத்தில் புதுமை தேவைதான். ஆனல், அவைகளை வெளிக்காட்ட ஆலயம் ஏற்ற இடமல்ல.

புனிதமான நமது தேவன் சந்நிதானத்திற்கு நாம் தூய்மையான உள்ளத்தோடு செல்வதைத்தான் தேவன் விரும்புகிறார்.

ஆம்.

''படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தம்மைவணங்க.''

தேவனின் சித்தம் எதுவோ அதை நிறைவேற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடமைப்பட்டவனே.

நாகரீகப் பாணியில் நம் உடலையும் உள்ளத்தையும் நாம் இட்டுச் செல்வதால் நாம் தேவனின் அன்பை அனுக்கிரகத்தை இழந்தவர்களாகி விடுவோம் என்பதில் சந்தேகமேயில்லை.

எனவே, சிந்தித்துப் பார்ப்போம். நாம் கிறிஸ்தவப் பாதையில் தானு செல்கிறோம்? நமது தேவனுக்கு உகந்த நேசப் பிள்ளைகளாக நாம் நமது அன்றாட கருமங்களை நிறைவேற்றுகிறோமா?

நாகரீக மோகத்தில் மூழ்கிக்கிடக்கும் நமது உள்ளத்தைத் தட்டி எழுப்புவோம். நமது நெஞ்சத்தை தேவன் ஒருவருக்கே உறைவிடமாக்குவோம்.

அப்பத்தின் வடிவில் நமது உள்ளத்தில் உயிராய் வாழும் தேவனின் மகிமையை எண்ணிப் பூரிப்படைவோம்! அவர் ஒருவரையே வணங்கி அவர் ஒருவருக்கே நமது சேவையை அளிப்போம்.

செல்வி சந்திரா பர்னண்டோ

## தங்கச் சுரங்க கண்டுபிடிப்பு

தங்கச் சுரங்கத்தைக்கண்டு பிடிக்க ஆவல் கொண்ட ஒருவர் ஒரு லட்சம் ரூபா செலவிட்டு ஒன்றரை ஆண்டுகள் உழைத்து ஒரு மைல் ஆழம் தோண்டியும் தங்கம் கிடைக்கவில்லை. ஆனல் மற்றொருவர் அதனைக் குத்தகைக்கு எடுத்து ஒரு சில அடிகள் மட்டும் தோண்டினர். தங்கச்சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டது.

இதே போன்றதுதான் மனித வாழ்விலும் நடைபெறுகிறது. எத்தனையோ காரியங்களை முயற்சிக்கிறோம். வெற்றி கிட்டும் அளவிற்கு சோர்வடைந்து கைவிட்டு விடுகிறோம். முயற்சிப்போம் வெற்றி பெறுவோம்.

இ. பேர்ணட்.

## மனிதன் புனிதனகலாம்

ஆதிக் கிறீஸ்தவர்களிற் சிலர் தாம் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக வனம் சென்று தம்மை வாட்டிவதைத்துப் புனிதர்களானர்கள். சிலர் கிறீஸ்துவுக்குச் சான்று பகர்ந்து வேதசாட்சிகளாக மரித்துப் புனிதரானர்கள். துறவிகள் தம் துறவற வாழ்வைப் பழுதின்றிக் காத்து புனிதரானர்கள்.

அப்படியாயின் துறவிகளும் தவவாழ்க்கை வாழ்பவர்களும் மாத்திரமே புனிதராகலாம் என்பது தவறு. திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொருவரும் கடவுளின் அன்புக் குழந்தைகளாகவும் பரிசுத்த ஆவியின் ஞான ஆலயங்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளனர். அந்த ஆலயம் தூய்மையாக விளங்க வேண்டுமாயின் நமது வாழ்வு களங்க மற்றதாக அமைய வேண்டும். நம்மை உத்தம வாழ்வு வாழும்படி வாழ்ந்து காட்டிய கிறீஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும். அவர் நமக்களித்த கற்பனைகளின்படி நடத்தல் வேண்டும், நம்மைப்போல் நம் அயலாரையும் நேசித்து அவர்களின் இன்ப துன்பங்களிலும் இரண்டறக்கலந்து வாழ்வோமாயின் புனிதர்களாகலாம்.

கடவுள் நமக்களித்த துன்பங்களைப் பொறுமையுடன் சகித்து அவர் சித்தம் எங்கள் பாக்கியம் என ஏற்று நடப்போமாயின் நாம் எல்லோரும் புனிதர்களாகி மோட்ச பாக்கியத்தில் இனிது பங்குபற்றி முடிவில்லா இன்பம் பெற்று மகிழலாம். மனிதன் என்பவன் புனிதன் ஆகலாம்.

மேரி பற்றீசியா றஞ்சினி. தோமாதகல்.

## பிறர் சிநேகம் பற்றிப் புனிதர் பகர்வது

நமது அயலானைப்பற்றி நல்லது நினைப்பதால் உண்டாகும் உள்ள மகிழ்வைத் தவிர வேறு எதுவும் இனியது உண்டோ

—புனித குழந்தை யேசு தெரேசாள்.

நாம் தேவனில் கொண்டுள்ள அன்பை வெளியரங்கமாகக் காட்டவேண்டுமென்பதற்காகவே எமது அயலானைத் தேவன் எமக்குத் தந்துள்ளார்.

— புனித சியன்ன நகர கத்தரீனம்மாள்.

உண்மையான பிறர்சிநேகமானது கைகளை அகலவிரிக்கிறது. ஆயின் கண்களை இறுக மூடிக்கொள்கிறது.

—புனித வின்சென்ற் டீ போல்'

திவ்விய யேசு உன் இருதயத்தில் அடிக்கடி எழுந்தருளிவர ஏதுவாயிருக்கிற உன் நாவால் பிறர்சிநேகத்தைப் பங்கப்படுத்தக்கூடிய எந்தக் குற்றத்தையும் வெகு எச்சரிக்கையோடு அகற்றிவிடு.

—புனித மாக்கரீத் மரியம்மாள்.

அனுப்பியவர்:

செல்வி தே. பற்றிமா உடுவில்.

## இளைஞருக்கு!

''மீட்பளிக்கும் நற்செய்தியைப் போதிக்கும் அழைப்பிற்கு செவி கொடுங்கள். உங்கள் வாலிப உற்சாகத்துடனும் விசுவாச செல்வத்துடனும் முன்வாருங்கள். சிறு பிள்ளைகளைப்போல் வாழ வேண்டும் என விரும்பும் ஓர் இறைவன் இருக்கிறர் எனப் போதியுங்கள். உடலைப் பராமரிக்கவும் புத்தியைப் பிரகாசமாக்கவும் உயர்வான வாழ்வு வாழ்ந்து மனித அன்பில் அதிகரிக்கவும் திருமறையைத் தேவ மகிமைக்காகக் கட்டியெழுப்பவும் மனிதருக்குக் கற்பியுங்கள்,''

பாப்பரசர் போல்.

## வாழ்த்துகின்றோம்!

காவலன் வார இதழின் 'இளைஞர் உலகு' தனது இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவைக் கண்டுகளிப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்,

இளைஞர் உலகு அம்சங்கள் இருபாலாராலும் விரும்பப்படுகின்றன, நம் கத்தோலிக்க உலகுக்கு நற்பயன் அளித்து வருகின்றன,

காவலன் இளைஞர் உலகு எதிர்காலத்திலும் நற்சேவையாற்ற இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துக்கள் நல்கின்றேன்.

யாழ். ஜெயம்;

295. டாளி றோட்,
கொழும்பு 10.

*　　*　　*

பாதுகாவலனில் இளைஞர் காவலாய்த் திகழும் இளைஞர் உலகு என்றும் விருத்தியெய்திப் பயன்பெருக்குவதாக.

திருமதி எம். சவரிமுத்து
ஆசிரியை,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

## தேக்க நிலையா? ஊக்க நிலையா?

பெரியதொரு நீர்த்தேக்கம். ஓடிவந்த நீரெல்லாம் கூடித் தேங்கி நிற்கிறது. இரண்டு நாட்கள் கழிந்தன. பளிங்கு போன்று தெளிந்து வந்த நீர் பசிய நீராக மாறியது—புழுக்கள் நிறைந்தன—கொசுக்கள் பறந்தன. நீர்த்தேக்கம் நாற்றமெடுத்தது. மனித தேவைக்குதவாத சாக்கடையாக மாறியது.

தெள்ளத் தெளிந்த நீரோடை. பார்த்த நேரமெல்லாம் பளிங்கு போன்ற நீர் ஓடிக்கொண்டிருந்தது. மனிதர் தம் தேவைகளைப் பூர்த்தி செய்தனர்,

இளைஞர் வாழ்வும் இதே போன்றதுதான், இன்றைய இளைஞரிடையே சேவைத் துறையிலே, செயல்முறையிலே ஒரு தேக்கநிலை காணப்படுகிறது. இந்நிலை நீடிக்குமானல் அந்த நீர்த்தேக்கத்திற்கு ஏற்பட்ட நிலைதான் எமக்கும் ஏற்படும். எம்வாழ்வும் பாழ்படும்,

ஓயாது ஓடிக்கொண்டிருந்த அந்த நீரோடையானது மக்கள் வாழ்வில் மகத்தான சேவை புரிந்தது. தெளிந்த நீரை அள்ளிப்பருகினர், தாகம் தணித்தனர். பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சினர், இளைஞர் வாழ்வும் மக்களுக்குப் பயன்படவேண்டும். சேவை செழித்துவளர வேண்டும்.

தேங்கிய நீர்போன்று இளைஞர் சமுதாயம், சேவை உணர்வற்று வாழுமானல் அது பயனற்ற வாழ்வு. இத்தகையதொரு இளைஞர் சமுதாயம் இருப்பதைவிட அழிந்தொழிவதுதான்மேல். ஆம் இளைஞர் சமுதாயமே விழித்தெழு! செயல்படு, தேக்க நிலைமாறி ஊக்கநிலை வளரட்டும், தெளிந்த நீரோடையாக எம்வாழ்வு மாறட்டும், உலகு அதன் பயனை உணரட்டும்.

திராட்சை யூராள்.

பெண்:

○ கற்புடைய பெண் அமுதம் போன்றவள்,

○ பெண்களின் இரண்டு சொட்டுக் கண்ணீர் நூறு சொற்களைவிட வலிமையுள்ளது:

*　　*　　*

ஆண்:

○ ஆண் இல்லாவிடில் பெண்ணுக்கு உலகமில்லை, உயிரில்லை. ஆண்—பெண் ஒன்று மற்றென்றின் மகுடம்.

—யாரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1972-ம் ஆண்டுக்கான
# மறைக்கல்வித்தேர்வு மாதிரி வினக்கள்
## ஆரும் வகுப்பு

நேரம்: 1மணி.

1. பின்வருவனவற்றிற்குச் சுருக்கமான விடைதருக.

(அ) நாம் எதற்காக இவ்வுலகில் இருக்கிறோம்?

(ஆ) துன்பமும், சாவும் இவ்வுலகில் எவ்வாறு நுழைந்தன?

(இ) கடவுள் மரியம்மாளுக்குக் கொடுத்த தனிப்பட்ட வரங்கள் யாவை?

(ஈ) அர்ச்சியசிட்டர்களுடைய சமுதீதப் பிரயோசனத்தைச் சேர்ந்தவர்கள் யாவர்?

(உ) பின்வரும் மலைகளின் விசேஷங்கள் எவை? (சீனய், ஒலிவேத், கல்வாரி, தபோர்).

2. தடித்த எழுத்தில்வரும் வாக்கியங்களுக்குப் பதிலாக அடைப்புக் குறிக்குள்உள்ள சரியான சொற்தொடரைத் தேர்ந்தெடுத்து அதைக் குறிப்பிட்டுக் காட்டுக.

உதாரணம்: **கிறிஸ்துநாதர் ஆன்மசரீரத்துடன் மோட்சத்திற்கு எழுந்தருளினர்.** (திருவுருமாற்றம் — அவதரித்தல் — பரலோக ஆரோகணம்).

(i) **பிதா, சுதன், பரிசுத்த ஆவி** அந்நியோன்னியமாக அன்பு கொள்ளுகிறார்கள். (மேற்றிராணிமார் சங்கம் — பரி. திரித்துவம் — திருச்சபை).

(ii) **கிறிஸ்துநாதர் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தபின் ஐம்பதாம்நாள்** (மோட்சத்துக்கு எழுந்தருளிய நாள் — பெரிய வியாழக்கிழமை — பெந்தகோஸ்தே திருநாள்).

(iii) **அப்போஸ்தலர்கள், வேதசாட்சிகள், தேவமாதா முதலியோர்** மோட்சமகிமையை அனுபவிக்கிறார்கள். (போர் புரியுஞ் சபை — இன்புறுஞ் சபை — துன்புறும் சபை).

(iv) **அறிவீனரைப் படிப்பிப்பது** கத்தோலிக்கரின் கடமையாகும் (பத்துக் கற்பனை — இரக்கச் செயல் — திருச்சபையின் கட்டளை).

(v) கிறிஸ்துநாதர் தமது பகிரங்க வாழ்வுகாலத்தில் **புதிய இறைமக்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்** (திருச்சபை — சீனய் உடன்படிக்கை — இஸ்ராயேலர்).

(vi) இது **பரிசுத்த ஆவியின் திருநாளுக்குப்பின் 25ஞாயிற்றுக் கிழமைகளைக் கொண்ட காலஅளவாகும்.** (ஆகமன காலம் — தபசுகாலம் — பெந்தகோஸ்தே காலம்).

(vii) **இது மேற்றிராணியார் ஒருவர் ஆளும் பிரதேசமாகும்;** (மேற்றிராசனம் — பங்கு — மாவட்டம்)

(viii) **இது பரிசுத்த ஆவியிடமிருந்து விசேட சக்தியைத்தரும் ஒரு தேவதிரவியஅனுமானம்;** (மெய்விவாகம் — நோயிற் பூசுதல் — உறுதிப்பூசுதல்)

(ix) **கிறிஸ்துநாதரைத் தலைவராகக்கொண்ட விசுவாசிகள் அனைவரும் இப்பெயரால் அழைக்கப் படுகின்றனர்.** (மரியாயின் சேனை — கிறிஸ்துநாதரின் மறையுடல் — மேற்றிராணிமார் சங்கம்).

(x) **இரட்சிப்படைய ஆத்துமாக்கள் சுத்திசெய்யப்படுகிறது இங்கேதான்** (சாவு — நரகம் — உத்தரிப்பிடம்).

3. இவை சம்பந்தமான நாட்களைக் குறிப்பிடுக.

(i) யேசுக்கிறீஸ்துநாதர் திவ்வியநற்கருணையை ஏற்படுத்திய நாள்....................

(ii) "மனிதா, நீ மண்ணாய் இருக்கிறாய்; மீண்டும் மண்ணாவாய் என்பதை நினைத்துக்கொள்" என்று குருவானவர் உமக்குச் சொல்லும் நாள்................

(iii) புனித மிக்கேல் சம்மனசானவரின் திருநாள்..............

(iv) தேவமாதா பிறந்த திருநாள்..............

(v) மூன்று இராசாக்கள் குழந்தை யேசுவுக்குக் காணிக்கை ஒப்புக்கொடுத்த திருநாள்................

4. பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டவை?

(i) "இதோ ஆண்டவருடைய அடியாள்; உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது.

(ii) "நீங்கள் உலகமெங்கும்போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள்."

(iii) "அவர் இங்கு இல்லை; உயிர்த்தெழுந்து விட்டார்."

(iv) "சவுலே, சவுலே ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?"

(v) "நான் இவ்வுலகிற்குத் தீர்ப்பிடவரவில்லை; அதை இரட்சிக்கவே வந்தேன்."

5. இவ்விடங்களில் நடந்த பிரதான சம்பவம் ஒன்று தருக

(I) கானாவூர், (ii) சிங்காரத்தோட்டம், (iii) பெத்லகேம், (iv) கப்பர்நாகூம், (v)யோர்தான் நதி.

6. இவர்கள் யார்?

(i) மோசேஸ், (ii) ஸ்நாபக அருளப்பர், (iii) மரிய மதலேனா, (iv) போஞ்சியு பிலாத்து, (v) புனித சின்னப்பர்.

7. பின்வரும் வினக்களுக்குச் சுருக்கமான விடைதருக

(i) அவசரவேளையில் ஒருவருக்கு எவ்வாறு ஞானஸ்நானம் கொடுப்பீர்?

(ii) மலைப் பிரசங்கத்தில் கூறப்பட்டவைகளுள் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(iii) பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள்மேல் இறங்கியதுபற்றி மூன்று வசனங்கள் எழுதுக?

(iv) ஒரு பாவம் சாவானபாவம் ஆவதற்கு வேண்டிய மூன்று காரியங்கள் எவை?

(v) இலங்கையில் அனுசரிக்கப்படும் ஒருசந்நிநாட்களெவை?

(vi) உமது பங்கில் சேவைசெய்யக்கூடிய மூன்று வழிகளைக் குறிப்பிடுக.

(vii) உமது வகுப்பிலுள்ள ஓர் ஏழைப் பிள்ளையின் மட்டில் நீர் எவ்வாறு நடந்து கொள்வீர்?

(viii) உமது சமய அறிவை வளர்க்கக்கூடிய மூன்று வழிகள் குறிப்பிடுக.

8. சுருக்கமான விடைதருக.

(i) ஜெருசலேமில் திருச்சபைக்கு எதிராக எழுந்த கலாபனை யாது?

(ii) பூசைப்பலியின் பாகங்கள் எவை?

(iii) முதலாவது கலாபனை யாரால் எப்படி உண்டானது?

(iv) திருச்சபை எப்படிச் சுதந்திரம் அடைந்தது?

(v) மூன்றும் இன்னோசென்து மத்தியகாலத்தில் ஆண்டுவந்த பாப்புமார்களுள் மிகச்சிறந்தவரெனக் கருதப்படக் காரணமென்ன?

# ஆண்டவர் உங்களோடு.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாவிகளுடன் சந்தோஷமாகக் கலந்துகொண்டார். பாவத்தைத்தவிர மற்றெல்லாவற்றிலும் பூரணமனிதன் போலானார். அவர் சிலுவையில் மரித்தார். இவைகளெல்லாம் சரித்திரமளிக்கும் சத்தியங்கள். இது இப்படியிருக்க யார்சொன்னது கிறீஸ்து மனிதனென்று? "நான் மனிதனை அறியேன்" என்று கூறின கன்னிமை கெடாத மரியாளின் பிள்ளை அவர். பன்னிரு பராயத்திலேயே வேதபாரகர் அதிசயிக்கத்தக்கதாக ஞான விஷயங்களை அவர்களுக்குப் போதித்தவர் அவரே. வியாதிக்காரருக்கு ஆரோக்கியத்தை அளித்தார். மரித்தோரை உயிர்ப்பித்தார். பாவிகளை மன்னித்தார், நல்ல கள்வனுக்கு அதேநேரம் மன்னிப்பும்,மோட்சபாக்கியமும் வாக்குப்பண்ணினார். கடைசியாக அவரே மரித்து உயிர்த்தார். ஆ! ஆச்சரியமான கிறீஸ்துவே!! விண்ணுலகோருக்கும், மண்ணுலகோருக்கும் விநோதமானவரே!!! கிறீஸ்து தேவனும் மனிதனுமாயிருக்கிறார். அவர் எவ்வளவு தேவனாய் இருந்தார்? நித்தியபிதாவின் ஏகசுதனாய் இருக்கிறார். அவருக்குச் சரியொத்தவராய் இருக்கிறார். அவரைக் கண்டவர்களுக்கு அவரில் அவரின் பிதாவைக் காணக்கூடியதாயிருந்தது. அவர் சகல பாவங்களுக்கும் பூரண பரிகாரமாய் இருந்தார். அவர் மனுஷ பலவீனத்தின் சகல அக்கிரமங்களுக்கும் பரிகாரம் செய்தபடியால் புனித லூக்காசில் இசையாஸ் கூறுவதுபோல், "அவர் அக்கிரமிகளோடுஎண்ணப்பட்டார்" அவர் கடவுளளவு கடவுளாயும், பாவத்தைத்தவிர மனிதனளவு மனிதனாயும் இருந்து இரட்சணிய வேலையைச்செய்து முடித்தார். எவ்வாறு செய்து முடித்தார்? தான் மிகவும் ஆவலோடு தழுவின திருச்சிலுவையால் தான். இத்திருச்சிலுவையால் பாவத்தால் மனுக்குலம்இழந்த சுதந்திரத்தை அவர்களுக்குத் திரும்பவும் அளித்தார். இறைமக்களின் சுதந்திரசீவியத்தின் சம்பாவனையே தேவன் அவர்களுக்கு அளிக்கும் பரமானந்தம் இறைமகன் அளித்தபாதையே சிலுவைப் பாதை. இப்பாதையில் செல்வோர், "அவரிலும் அவராலும் அவரோடும்" என்றும் சீவிக்கிறார்கள். இப்பாதையில் செல்வோர் என்றும் "அவருடைய மரணத்தை அறிக்கையிட்டு அவருடைய உயிர்ப்பையும் எடுத்துரைக்கிறார்கள்." நித்திய குருப்பிரசாதியாகிய கிறீஸ்து அன்பாகிய தம்மை எல்லோருக்கும் பரிமாரி, "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று தம்மைப் பூரணமாய் அளிக்கும்போது அன்பின் நிறைந்த விடாயுள்ள கிறிஸ்தவர்கள் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கும் குருவுக்கு, "உம்மோடும் இருப்பாராக" என்றுகூறி, அன்பின் ஐக்கியத்தை நிறைவேற்றுகிறார்கள். குருவும், கிறிஸ்தவர்களும் ஒன்றித்தலே கிறிஸ்துவில் சீவியம். இவ்வாறுதான் நாம்கிறிஸ்துவின் உத்தானத்திற்குப் பங்காளிகளாகி அவருடைய நித்திய மகிமையளிக்கும் பரமானந்தத்திற்குப் பங்காளிகளாகிறோம் பிதாவுக்கும், சுதனுக்கும், தூயஆவிக்கும் சதாகாலம் புகழ் உண்டாவதாக ஆமென்.

### கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்

**கத் நற்சிந்தனை 5 நிமி.**
ஐப்பசி 14, 15, 16
வண: சகோ. கிளமென்ற்
O. S. B. அம்பிற்றியா

**சிறுவர் நிகழ்ச்சிகள் 15 நிமி.**
ஐப்பசி 4
சம்பத்திரிசியார் கல்லூரி
தலவாக்கலை

**அரை மணி. நிகழ்ச்சிகள்**
ஐப்பசி 8
அருட்திரு.
தோமஸ்பர்னந்து
நுவரெலியா

### கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்

நாள்: 8-10-72;
நேரம்: மாலை 7-00
"வினவிடை"—மலர் 2;
நடாத்துபவர்:
திரு; செல்வம், அ.ம.தி.

* * *

நேரம்: மாலை 7–08
கத்தோலிக்க நிகழ்ச்சி
நடாத்துபவர்: மறைத்திரு
தோமஸ் பெர்னண்டோ

குறிப்பு: இத்திங்கள் தொட்டுக் கத்தோலிக்க நற்சிந்தனை காலை 6-10 மணிக்கு அலைவரிசை ஒன்றில் ஒலிபரப்பாகும்.


# புரட்சிக் கிறிஸ்து

**ஆக்கியோன்:** தவத்திரு வே; அந்தனி ஜான்,
**விலை:** ரூபா 3-00

**யாழ்ப்பாணத்தில்,**
**கிடைக்குமிடம்:** அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சொற்ப பிரதிகள் மாத்திரமே விற்பனைக்குண்டு)


● இங்கிலாந்திலே புள்ளிங்காம் எனுமிடத்திலுள்ள வறியகிளேயரின் ஏகாந்த கன்னிகாமடத்திலே சங்: பெனடிக்ரா என்ற கன்னியாஸ்திரி தனது கன்னிகா அந்தஸ்தின் 50 ஆண்டு நிறைவுப் பொன்யூபிலிவிழாவை அன்று சனிவாரம் கொண்டாடியிருக்கின்றார். கடந்த 50 ஆண்டுகளிலும் ஒருமுறை ஒரு ஆஸ்பத்திரிக்கும், மற்றொருமுறை ஒரு பல்வைத்தியரைக் காண்பதற்கும், இன்னொருமுறை ஒரு கண்வைத்திய நிபுணரைக் கண்டுகொள்வதற்குமாக மூன்று தடவை மாத்திரம் மடத்தைவிட்டு வெளியில் சென்றிருக்கின்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆடு ஐப்பசி மாதம் 7-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org